# 05 விரதங்கள்

## அ. கார்த்திகை விளக்கீடு

கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் வரும் தினத்தில் அநுட்டிக்கப்படுவது திருக்கார்த்திகை விரதம். இது மற்றைய மாதங்களில் வரும் கார்த்திகை நட்சத்திர தினத்தில் நோற்கப்படும் கார்த்திகை விரதத்தை விட மேலான மகிமை உடையது. இக்காரணத்தினால் இவ் விரதம் திரு என்னும் அடைமொழி சேர்த்து திருக்கார்த்திகை விரதம் எனப்படுகிறது.

**திருக்கார்த்திகை விரத நியதிகள்,**

1. கார்த்திகை நட்சத்திரத்திற்கு முந்திய தினத்தில் (பரணித் தினத்தில்) ஒரு வேளை உணவு உண்ணல்.
2. திருக்கார்த்திகையில் உபவாசம் இருத்தல்.
3. ஆலய வழிபாடு, புராணபடனம் கேட்டல், தோத்திரங்களை பாராயணம் செய்தல்.
4. கார்த்திகை நட்சத்திரத்தின் மறுநாளான ரோகிணி தினத்தில் பாரணை செய்தல்.
5. ஆலயத்தில் தினைமா, தேன், சர்க்கரை, வாழைப்பழம் என்பவற்றை ஒருங்கே பிசைந்து ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு என ஒற்றை இலக்கத் தொகையில் அகல் விளக்கு வடிவில் மாவிளக்குச் செய்து, நெய்விட்டு திரி இட்டு ஏற்றுதல் ( இது மாவிளக்கு எனப்படும்.)
6. இவ்விரதத்தை தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் அனுட்டிக்க வேண்டும்.

திருக்கார்த்திகைத் திருநாள் குமாராலய தீபத் திருநாள் எனவும் அழைக்கப்படும். மறுநாள் ஆகிய பூரணைத்தினம் வீடுகளிலும் அனைத்து ஆலயங்களிலும் தீபமேற்றிச் சிறப்பாக வழிபாடு செய்யும் சர்வாலய தீபத் திருநாள் ஆகும். இதனை விளக்கீடு என்று கூறுதல் மக்கள் வழக்கம்.

மூன்று தினங்களில் நிகழும் சமயச் செயற்பாடுகளை உள்ளடக்கிய திருக்கார்த்திகை விரதம் திருவண்ணா மலையில் ஒரு பெரும் சமூக விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அம்மலைப்பிரதேச ஆதிவாசிகளின் திருக்கார்த்திகை விளக்கீட்டு விழாவைத்

தலைமுறை தலைமுறையாகத் தங்கள் குலவழிபாட்டுக் கடமையாக நிறைவேற்றி வருகின்றார்கள். பரணித் தினத்தில் செயற்பாடுகள் செய்து மலையடிவாரத்தில் **பரணித் தீபம்** ஏற்றும் வழக்கமும், கார்த்திகைத் தினத்தில் ஒருவார காலம் தொடர்ந்து எரியக் கூடிய வகையில் மாபெரும் கொப்பரைகளில் எண்ணெய் நிரப்பித் துணிகளைக் கட்டுக் கட்டாக இட்டுத் தீபம் ஏற்றுதலும் ஒரு சமூக சம்பிரதாயமாகக் கடைப்பிக்கப்பட்டு வருகிறது.

இத் திருவண்ணாமலைத் தீபத்தைத் தரிசித்து இலட்சோப லட்சம் மக்கள் பக்தி ஆரவாரம் செய்யும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும். இதுவே திருக்கார்த்திகைத் தினச் சிறப்பு ஆகும்.



இந்நாளில் ஆலயங்களில் சுட்கப்பனை (உலர்ந்த தென்னை, பனைத் தண்டு களால் ஆனது) என்னும் சொக்கப்பானை சுவாலித்து எரியும் காட்சி கண்ணுக்கினிய பரவசக் காட்சி ஆகும். **புற இருள் களைந்து ஒளிபரப்பும் கார்த்திகை விளக்கீடு அகஇருள் போக்கி ஞானச் சுடர் பரப்பும்** தத்துவப் பொருளைக் குறிக்கின்றது.

திருக்கார்த்திகையின் பெருமையைக் கூறும் பின்வரும் பாடல்கள் சிறப்பாக ஓதத் தக்கன ஆகும்.

திருச்சிற்றம்பலம்

**வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத்தான் தொல்கார்த் திகை நாள்**
**தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.**

திருச்சிற்றம்பலம்

(சம்பந்தர் தேவாரம்)

## பாடச் சுருக்கம்

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி நாளில் இவ்விரதம் அனுட்டிக்கப்படும்.

இவ்விரதத்தை அனுட்டிப்பதால் உள்ளந் தூய்மை அடைந்து, முருகப் பெருமானின் திருவருள் கைக்கூடும்.

இத்திருநாளின் மறுநாள் வீடுகளில் தீபங்கள் ஏற்றி கொண்டாடுவர்.

கார்த்திகை விளக்கீடு **புற இருள் களைந்து அக இருள் போக்கி ஞானச் சுடர் பரப்புதல்** எனும் தத்துவத்தைக் குறிக்கிறது.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. திருக்கார்த்திகை விரத நியதிகள் எவை?

2. கார்த்திகை விளக்கீட்டின் தத்துவத்தை விளக்குக.

3. சுட்கப்பனை எரித்தல் என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.

## செயற்பாடு

கார்த்திகை விளக்கீடு தோன்றிய வரலாற்றினை ஆசிரியரின் உதவியுடன் தொகுத்து எழுதுக.

## ஆ. மார்கழித் திருவாதிரை

மார்கழி மாதம் வரும் திருவாதிரை நட்சத்திரத்தில் நடேசர் அபிடேகத் திருவிழா மிகவும் பிரசித்தி வாய்ந்தது. சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரை. இது மட்டுமல்லாமல், மார்கழியில் ஒன்பது நாட்கள் திருவெம்பாவை விரதம் அனுட்டித்துப் பின் அவ்விரதத்தின் இறுதி நாளாக அமைந்துள்ளதும் திருவாதிரை யாகும்.


நடராசர்

இவ்விரத நாளில் நடேசருக்கு அபிசேகத் திருவிழாவும் **ஆருத்திரா தரிசனமும்** நடைபெறும். **ஆருத்ரா** என்ற வார்த்தைக்கு **நனைந்த** என்பது பொருள். மார்கழி, பனி கொட்டிக் கொண்டிருக்கும் மாதம். ஆதிரை விழாவின் அபிடேகச் சிறப்புக்கும் அப்பெயர் பொருந்தும். இதனையொட்டியே சிவபெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும், ஆதிரையான் என்றும் கூறுவர்.

இறைவனின் ஆனந்த நடனத்தை உணர்த்துவது நடராச வடிவம். நடராசப் பெருமான் திருச்சடையிற் பிறையை அணிந்திருக்கிறார். திருச்சடை இருபுறமும் நீண்டு பரந்து விளங்குகிறது. திருமுகத்தில் நெற்றிக் கண்ணும் புன்முறுவலும் காணப்படுகின்றன. திருக்கரங்களில் ஒன்று துடியை ஏந்தியிருக்கிறது. ஒரு திருக்கரம் அபய முத்திரையாக அமைந்திருக்கிறது. இத்திருக்கரத்தில் ஒரு பாம்பு சுற்றிக் கொண்டு படமெடுத்து ஆடுகிறது. மற்றொரு திருக்கரம் தூக்கிய திருவடியைக் காட்டுகிறது. வயிற்றிற் கட்டப்பட்ட உதரபந்தனத்தின் மூன்றினை திரு நடனத்தின் வேகத்தால் இடப்பக்கமாக அலைகிறது. இடத் திருப்பாதந் தூக்கிய திருவடியாகவும் வலத் திருப்பாதம் ஊன்றிய திருவடியாகவும் விளங்க அத்திருவடியின் கீழ்க் குறுகிய வடிவுடைய முயலகன் இருப்பதாக நடராச வடிவம் அமைந்துள்ளது.

நடராச வடிவத்திற் பல தத்துவப் பொருள்கள் அடங்கியுள்ளன. நடராசப் பெருமான் வலது திருக்கரத்திலே துடியை ஏந்தியிருக்கிறார். துடி ஒலியின் அறிகுறி. உலகத் தோற்றங்கள் அனைத்துக்கும் ஒலியே காரணம். துடியை ஏந்திய திருக்கரம் படைக்குந் தொழிலின் அடையாளமாகும். வலத் திருக்கரங்களில் ஒன்றாகிய அபயகரம் **அஞ்சவேண்டாம்** என்ற குறிப்பைக் காட்டுகின்றது. இது காக்குந் தொழிலடையாளமாகும். நடராசப் பெருமான் இடது திருக்கரத்திலே தீச்சுடரை ஏந்தி ஆடுகின்றார். இது அழிக்குந் தொழிலின் அடையாளமாகும். ஊன்றிய திருவடி மறைக்குந் தொழிலைக் குறிக்கிறது. தூக்கிய திருவடி குஞ்சித பாதமாகும். அது அருளுந் தொழிலைக் காட்டுகின்றது.

**அரன் துடி தோற்றம் அமைத்தல் திதியாம்**
**அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம்**
**அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி**
**அரனடி என்றும் அனுக்கிரகம்மே.**

என்ற திருமூலர் வாக்கு இதனையே குறிக்கின்றது.

**தோற்றந் துடியதனில் தோயும் திதி அமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமா**
**ஊன்று மலர்ப் பதத்தே உற்றதிரோ தம் முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு.**

என்பது உண்மை விளக்கச் செய்யுள்.

நடராசப் பெருமானுக்கு ஆதிரை அன்று நடைபெறும் அபிடேகம் காண்பது பெரும் பேறு. தில்லையில் ஆருத்திரா தரிசனம் மிக விசேடமாகும். அதுபோல் இலங்கையிலும் **ஈழத்துச் சிதம்பரம்** என்ற சிறப்புப் பெயர் பெற்றுள்ள காரைநகர்ச் சிவன் கோவிலில் நடராசப் பெருமானுக்கு அன்று பெருவிழா எடுக்கப்படும்.

### இவ்விரத நியதிகள்

1. திருவாதிரை தினத்தில் வைகறையில் துயிலெழுதல்.

2. நீராடி தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து, ஆலயத்திற்கு சென்று சிவழிபாட்டில் ஈடுபடுதல்.

3. நெய் விளக்கேற்றி அபிசேகம் கண்டு வழிபடுதல்.

4. உபவாசம் இருந்து மனம் மெய்களால் வழிபடுதல்.

### பாடச் சுருக்கம்

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நன்நாளில் அனுட்டிப்பது திருவாதிரை விரதமாகும்.

இவ்விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது.

இவ்விரத நாளில் உபவாசம் இருத்தல் சிறந்ததாகும்.

இந்நாளில் நடராசருக்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறும்.

### பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. திருவாதிரை விரதம் எந்நாளில் அனுட்டிக்கப்படும்?
2. இவ் உற்சவத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?
3. நடராச வடிவத்தின் தத்துவங்களை விளக்குக.
4. ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் ஆலயம் எது?

### செயற்பாடு

திருவாதிரை விரத நாளில் உங்கள் பிரதேச ஆலயங்களில் இடம்பெறும் சிறப்புக்களை பட்டியல்படுத்துக.

## இ. வரலட்சுமி விரதம்

ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமையில் வரலட்சுமி விரதம் அநுஷ்டிக்கப்படுவது வழக்கம். செல்வ போகங்கள், சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு என்னும் பலன்களை முன்னிட்டு வரலட்சுமி தேவியை விசேடமாக வழிபட்டுப் பெண்கள் இவ்விரதத்தை நோற்பர்.


அஷ்டலட்சுமி

இவ்விரதத்தை குலப் பண்டிகை என்றும் சொல்லலாம். கணவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், குழந்தைகள் பிறந்து குலம் தழைக்கவும், அஷ்ட ஐஸ்வரியம் கிடைக்கவும் வேண்டி சுமங்கலிப் பெண்கள் இவ்விரதத்தைக் கொண்டாடுவார்கள்.

வரலட்சுமி விரதத்தன்று வரலட்சுமி தாயாரை மனதால் வேண்டினால், ஆதி லட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, வித்யா லட்சுமி, வீர லட்சுமி, கஜ லட்சுமி, சந்தான லட்சுமி, விஜய லட்சுமி ஆகிய அஷ்டலட்சுமிகளையும் வேண்டிய பலன் ஒன்று சேரக்கிடைக்கும்

என்பது ஐதீகம். இவர்கள் அனைவரும் வரலட்சுமி விரதத்தன்று ஒரே தாயாரான வரலட்சுமியில் ஐக்கியம் ஆவதாக நம்பிக்கை.

## வழிபடும் முறை

முதலில் விநாயகர் பூஜையைச் செய்துவிட்டு பிறகு மகாலட்சுமி அஷ்டோத்திரம் பாடி வழிபட வேண்டும். நோன்புச் சரடுக்குத் தனியாகப் பூஜை செய்ய வேண்டும். பூஜை முடிந்தபின்பு தாயாருக்குப் பருப்புப் பாயாசம், தேங்காய், உளுந்துக் கொழுக் கட்டை, பால், தயிர், வெற்றிலை, பாக்கு, பழம் இவை அனைத்தையும் நைவேத்தியம் செய்ய வேண்டும். பிறகு பெரியோர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிய பின்னர் நோன்புச் சரடை வலது கையில் கட்டிக்கொள்ள வேண்டும்.

### இவ்விரதத்துக்குரிய நியதிகள்

★விரத தினத்தில் தாமரைக் கோலத்தின் மீது பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைத்தல்.

★மஞ்சளில் தோய்ந்த ஒன்பது நூலிழைகளை முறுக்கி எடுத்து முடிந்த ஒன்பது முடிச்சுக் காப்பைக் கும்பத்தில் வைத்துப் பூசை செய்தல்.

★பூசை முடிவில் காப்பை வலக்கையில் கட்டிக் கொள்ளல் (சிறப்பு மரபு).

★விசேட நைவேத்தியமாக நெய்ச்சாதம் படைத்தல்.

★விசேட அர்ச்சனைப் பொருளாக அறுகம்புல்லைப் பயன்படுத்தல். என்பன குறிப்பிடத்தக்கன ஆகும்.

இந்த விரதத்துக்கு உபவாசம் விதியாக இல்லை. நண்பகல் போசனம், இரவு பலகாரம் உண்ணல் இவ்விரத அநுஷ்டானத்துக்கு உரியன ஆகும். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அநுஷ்டித்தல் இவ்விரதத்துக்குரிய மரபு.

## பாடச் சுருக்கம்

ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக் கிழமை வரலட்சுமி விரதம் நோற்கப்படும்.

இவ்விரதத்தை செல்வம், சௌபாக்கியம், மற்றும் புத்திரப்பேறு என்பவற்றை வேண்டியே பெண்கள் அனுட்டிப்பர்.

இவ்விரதத்திற்கு உபவாசம் விதியாக இல்லை.

வரலட்சுமி விரதத்தை தொடர்ந்து ஒன்பது வருடங்கள் அனுட்டிப்பது சிறந்ததாகும்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. வரலட்சுமி விரதத்தை சுருக்கமாக விளக்குக.

2. இவ்விரதம் அனுட்டிப்பதன் நோக்கம் யாது?

3. இவ்விரதத்திற்குரிய நியதிகள் மூன்று தருக.

4. வரலட்சுமி விரதம் எத்தனை வருடங்கள் நோற்கப்படும்?

## செயற்பாடு

இலங்கையிலுள்ள ஆலயங்களில் ஓர் ஆலயத்தைத் தெரிவு செய்து அவ்வாலயத்தில் வரலட்சுமி விரதம் கொண்டாடப்படும் முறையினைத் தொகுத்து எழுதுக.